1981 ஏப்ரல் 2]

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்—அவர்களே, பாலில் கலப்படம் என்பதிலே தனியார்கள் அந்த குற்றங்களைச் செய்தால் வழக்கு தொடர்வது பற்றி ஆட்சேபணை இல்லை. கூட்டுறவுப் பால் நிறுவனங்களில் விற்பதற்குப் பால் எடுத்து வருகின்றபொழுது அதிலே கலப்படம் என்று குற்றம் வந்தால், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மீது வழக்கு போடுவது சரியாக இருக்காது. எங்கிருந்து பால் எடுத்து வரப்படுகிறதோ, அது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

மதுரை மாவட்டத்தில் மாம்பழச்சாறு பதனிடுதல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 595—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை மதுரை மாவட்டம் நத்தம் தாலுகாவில் அமைக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மதுரை மாவட்டத்தில் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் பகுதியில் ஏராளமாக மாம்பழங்கள் விளைகின்றன. வருகின்ற காலத்திலாவது மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த தொழிற்சாலை அமைப்பது பற்றி தொழில் வணிக இயக்குநரிடம் குறிப்பில்லை. தொழில் வணிக இயக்குநர், இத்தகைய தொழிற்சாலை மதுரை பகுதியில் நிறுவ வாய்ப்புகள் ஏதாவது இருக்கிறதா என்பதை மதுரை மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே; பெரியகுளம், போடிநாயக்கனூர், நத்தம் கொட்டாம் பட்டி போன்ற வறட்சிப் பகுதிகளில் ஏராளமாக மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கனிகளில் சிறந்தது மாங்கனி என்று சொல்லப்படுகிறது. தனியார்கள் மாம்பழங்களை பதனிட்டு பானமாக கொடுக்கிறார்கள்; ஆந்திர மாநிலத்தில் ஜெல்லி போன்று செய்து ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். ஆகவே வறட்சிப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே, மாம்பழங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் விதத்திலே, இந்தப் பானம், ஜெல்லி போன்ற பதார்த்தங்களை உற்பத்தி செய்ய அரசு முயற்சிகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, காதி மற்றும் கிராம வாரியத்தின்கீழ் 1980—81 ஆம் ஆண்டு 50 தனியார்கள் பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு ஒரு தொழிற்சாலைக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் என்ற வகையில் 5 லட்சம் கடனாக தர சம்மதித்துள்ளது. அந்தத் திட்டத்தின்படி இதுவரையில் 36 தொழிற்சாலைகளுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கடனாக அளித்திருக்கிறார்கள். இன்னும் தேவைப்பட்டால் காதி மற்றும் கிராம வாரியத்தின் வாயிலாக 14 தொழிற்சாலைகளை விரிவுப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே; சேலத்து மாம்பழத்தைப் போன்று தென்காசி, கடையநல்லூர் போன்ற வட்டாரங்களிலே மிகுந்த ருசியுள்ள மாம்பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. தென்காசியிலிருந்து பம்பாய்க்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. தென்காசியிலே ஒரு பழச்சாறு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே; இல்லை.

திருப்புடைமருதூர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 596—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் ஆலயத் திருப்பணித் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?